# சைவ நெறி

## நான்காம் வகுப்பு



கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

இலவசக் கல்வியை முழுமையாக வழங்கவேண்டுமாயின் பாடநூல்களும் இலவசமாக வழங்கப்படவேண்டுமெனும் கருத்து முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், 1945 சனவரி 24 ஆந் தேதி, அப்போது சட்டசபையிலே களனித் தொகுதி உறுப்பினராக விளங்கிய தற்போதைய சனாதிபதி மேன்மைதங்கிய ஜே. ஆர். ஜயவர்தன அவர்களாற் கூறப்பட்டது. அவர்களுடைய ஆணைப்படி அவ்வாலோசனை 1980 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து செயலாக மலர்ந்தமை காரணமாகவே இன்று இந்நூல் உங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது.

நல்லன கற்று
நலம் பெறுவீரென
நம்மரசளிக்கும்
நன்கொடை இந்நூல்
நன்கிதைப் பேணி
நலமே கற்று
நற்குணம் பெற்ற
நற்குடியாவீர்

லயனல் ஜயதிலக,
கல்விச் சேவைகள் அமைச்சர்

# சைவ நெறி

## நான்காம் வகுப்பு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதலாம் பதிப்பு 1979
இரண்டாம் பதிப்பு 1981
மூன்றாம் பதிப்பு 1983

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

**பாடநூல் உபகுழு**

கலாநிதி வே. இராமகிருஷ்ணன்
திரு. சி. முருகவேள்
திருமதி பராசக்தி சுந்தரலிங்கம்
திரு. ந. சண்முகரத்தினம்
திரு. செ. வேலாயுதபிள்ளை
திருமதி பாலம் லக்ஷ்மணன்

**எழுத்தாளர் குழு**

திருமதி புவனேஸ்வரி அருணாசலம்
திருமதி மனோன்மணி நாகநாதன்
திருமதி பரமேஸ்வரி அழகரத்தினம்
திருமதி பத்மா சோமகாந்தன்
திரு. க. சி. சண்முகம்
திரு. கு. குருசுவாமி

**ஓவியர் குழு**

திரு. ஆ. இராசையா
திரு. ஜனார்த்தனன் இரத்தினசபாபதி

**பதிப்பாசிரியர்**

திரு. வே. வல்லிபுரம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அரசாங்க அச்சகக்
கூட்டுத்தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

83/௧௩/37 (40,000)

## பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | நடன விநாயகர் | 1 |
| 2. | உமை தவம் | 4 |
| 3. | சோமாஸ்கந்தர் | 7 |
| 4. | தேவசேனபதி | 9 |
| 5. | சூரன் போர் | 12 |
| 6. | முருகனுக்கு ஆறு நாள் | 17 |
| 7. | பூச இனியது நீறு | 30 |
| 8. | மணிகள் | 34 |
| 9. | தீபாராதனை | 36 |
| 10. | மாகேசுர பூசை | 38 |
| 11. | மாகேசுர பூசையின் சிறப்பு | 40 |
| 12. | பாத யாத்திரை | 43 |
| 13. | கதிர்காமம் | 47 |
| 14. | கொழும்பில் முருகன் திரு உலா | 50 |
| 15. | முருகன் தலம் மூன்று | 53 |
| 16. | குறிஞ்சிக் குமரன் | 58 |
| 17. | சிவனை மறந்த முனிவர்கள் | 60 |
| 18. | குறுமுனி | 62 |
| 19. | ஏடு காத்த நம்பி | 65 |
| 20. | தொண்டு | 70 |
| 21. | ஆதிசேடன் சேவை | 72 |
| 22. | தருமபுத்திரன் யாகம் | 74 |
| 23. | மிகப் பெரிய தானம் | 76 |
| 24. | ஆருணி | 79 |
| 25. | பசு | 83 |
| 26. | வைகறைத் துயிலெழு | 85 |
| 27. | மூதுரை | 88 |

உ

சிவமயம்

## கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

சலம்பூ வொடுதூ பம்மறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
உன்நா மம்என்நா வில்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே

திருச்சிற்றம்பலம்

**குறிக்கோள் :**

1. *கடவுள் நம்பிக்கையை வளர்த்தல்.*
2. *கடவுள் அன்பின் வடிவமானவர் என்பதை அறியச் செய்தல்.*
3. *அன்புவழி நின்று சிந்தனை, சொல், செயல் என்பவற்றிற் சமயப் பண்புகளை வளர்த்தல்.*
4. *எமது சமய பாரம்பரியத்தைப் பின்வரும் தலைப்புக்கள் மூலம் உணரச் செய்தல் :*
   - *(அ) கடவுள் மூர்த்தங்கள்*
   - *(ஆ) வீட்டிற் சமயம்*
   - *(இ) சூழலிற் சமயம்*
   - *(ஈ) முனிவர்கள், அடியார்கள்*

# 1. நடன விநாயகர்



நடன விநாயகர்

விநாயகப் பெருமானை வணங்கிய பின்னரே நாம் எந்தச் செயலையும் செய்யத் தொடங்குவோம். இப்படித் தொடங்கினால் எல்லாச் செயலும் நன்கு நிறைவுறும். இதை விளக்கப் பல கதைகள் உண்டு. அவைகளுள் ஒன்று கயமுகாசுரன் கதை.

கயமுகன் என்ற அசுரன் சிவபெருமானிடம் இறவாத வரம் பெற்றவன். வரம் பெற்ற கர்வத்தால் ஒருவரையும் மதிக்கவில்லை. இதனால் தேவர்களுக்குத் துன்பம் செய்து வந்தான். தனக்குமுன் நின்று அவர்கள் தலையில் குட்டிக்கொள்ள வேண்டும் என்றும், தோப்புக்கரணம் போடவேண்டும் என்றும் கட்டாயப்படுத்தினான்.

துன்பம் தாங்க முடியாத தேவர்கள், விநாயகப் பெருமானிடம் முறையிட்டார்கள். ''நீங்கள் பயப்பட வேண்டாம். நாம் கயமுகனைச் சங்காரம் செய்வோம்'' என்றார் விநாயகக் கடவுள்.

அசலன் என்ற பூத கணத்தின்மேல் ஏறினார். கயமுகனோடு போர் செய்தார். கயமுகன் வில்லெடுத்துப் போர் புரிந்தான். விநாயகர் அதை அழித்தார். பாசத்தை வீசி அவனது சேனைகளைக் கட்டினார். கயமுகனுக்குப் பொல்லாத கோபம் வந்தது. தவத்தாலே தான் பெற்ற படைக்கலங்களை எல்லாம் விநாயகர்மீது செலுத்தினான். அவை அவரை வலம் வந்தன.

பிள்ளையார் தமது திருக்கோட்டில் ஒன்றை முறித்து அவன்மீது செலுத்தினார். அவன் மயங்கி வீழ்ந்தான். பலம் இழந்தான். இறவாத வரம் பெற்றவனல்லவா? அவன் பெருச்சாளி வடிவம் கொண்டான்.

அசலன் மேல் இருந்த கணபதி பெருச்சாளியின் மீது அமர்ந்தார். அதனைத் தமது வாகனம் ஆக்கினார்.

தேவர்கள் யாவரும் சிவகுமாரரைப் போற்றித் துதித்தார்கள். ''ஐங்கரப் பெருமானே, கயமுகனுக்கு முன் கட்டாயத்தின் பேரில் தலையில் குட்டிக்கொண்டோம், தோப்புக்கரணம் போட்டோம். இப்பொழுது நாம் உமக்கு முன் குட்டிக்கொள்ளவும் தோப்புக்கரணம் போடவும் விரும்புகின்றோம்'' என்று கூறினார்கள். விநாயகப் பெருமானுக்கு முன் தலையில் மும்முறை குட்டிக்கொண்

டார்கள். இரு கைகளினாலும் இரு காதுகளையும் பிடித்துத் தோப்புக்கரணம் போட்டார்கள். இந்த வகை வழிபாட்டையே நாமும் இன்று விநாயகக் கடவுள் முன் செய்து வணங்குகின்றோம்.

விநாயகப் பெருமானும் அவர்களுக்கு முன் ஆனந்தக் கூத்தாடி, நடன விநாயகராகத் தரிசனம் கொடுத்தார்.

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும்—அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்
நண்ணுவதும் நல்லார் கடன் [தாள்



தோப்புக்கரணம் போடுதலும் குட்டிக்கொள்ளுதலும்

# 2. உமை தவம்



சிறுமி கோலத்தில் உமை தவம்புரியும் காட்சி

இமயமலை அரசன் இமவான். அவனுடைய மனைவி மேனை. இவர்கள் சிவபக்தியிற் சிறந்தவர்கள். அம்பிகையை வழிபடுபவர்கள். அம்பிகையே தமக்குக் குழந்தையாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அவர்களுடைய ஆசை நிறைவேறியது. அம்பிகை அவர்களுக்கு மகளாகத் தோன்றினர்.

இந்தக் குழந்தைக்கு உமை என்று பெயர் வைத் தார்கள். இமவானுடைய மகளாகையால் ஐமவதி என்றும் அம்பிகைக்குப் பெயர். ஐந்து வயதிலேயே இந்தக் குழந்தை சிவனை அடையவேண்டுமென்று தவம் செய்யத் தொடங்கி விட்டது. தாயும் தந்தையும் தடுத்தார்கள். அம்பிகை கேட்கவில்லை.

விளையாட வேண்டிய வயதில் இந்தக் குழந்தை தவம் செய்தது. பட்டாடைக்குப் பதிலாக மரவுரி தரித்தது. நல்ல உணவுகள் உண்ணவேண்டிய வயதில் விரதம் இருந்தது. *இங்ஙனம் சிறுமி உமை தவம் செய்தாள். இலை, தழைகளினாலே ஒரு பர்ணசாலை அமைத்து அதிலேயே வசித்தாள். அரச மாளிகையை மறந்தாள். சிவபெருமானையே நினைத்துத் தவம் செய்தாள்.

ஒருநாள் ஒரு கிழப் பிராமணர் கையிலே குடை, பிரம்பு, கெண்டி ஆகியவற்றுடன் தவச்சாலையை அடைந் தார். ''இவ்வளவு சின்னப் பெண்ணாக இருக்கிறாய், நீ ஏன் தவம் செய்கிறாய்?'' என்று கேட்டார். ''சிவனை அடையத் தவம் செய்கிறேன்'' என்றார் உமையவள். ''இளவரசியாகிய நீ ஆண்டியாகிய சிவனை அடையப் போகிறாயா?'' என்று கிழப் பிராமணர் சிரித்தார்.

மாட்டினில் ஏறி மான்மழுத் தரித்துக்
காட்டினில் சுடலையில் கணத்துடன் ஆடிப்
பிச்சைகொண் டுழலும் பித்தன் தன்னை
நச்சிநீ செய்தவம் நகைதரு கின்றது

என்று ஏளனம் செய்தார். இதைக் கேட்டவுடன் காதைப் பொத்திக்கொண்டார் உமை. உமைக்குக் கோபம் வந்தது. ''உம்மைப் பார்ப்பதே பாவம்; உடனே போய்விடும்'' என்றார். கிழவர் சிரித்துக்கொண்டே இருந்தார். உமை திகைத்தார். அங்கே கிழவரைக் காணவில்லை. சிவபெரு மானே காட்சியளித்தார். ''உமையே உன்னுடைய தவம் கண்டு நாம் மகிழ்ந்தோம். எம்மை நீ அடைவாயாக''

என்று ஆசீர்வதித்தார். உமை பேரானந்தங் கொண்டார். இறைவன் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினார். இருவருக்கும் திருமணம் நிறைவேறியது. இந்தத் திருமணக் கோலத்தை உமாமகேசுவரர் என்று சொல்வோம்.



உமா மகேசுவரர்

திருச்சிற்றம்பலம்

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவில்லைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே

திருச்சிற்றம்பலம்

— தேவாரம் —

# 3. சோமாஸ்கந்தர்

அசுரர்கள் தேவர்களை மிகவும் வருத்தினார்கள். வருத்தம் தாங்கமுடியாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டார்கள்.

சிவபெருமானது நெற்றிக் கண்களிலிருந்து ஆறு தீப் பொறிகள் தோன்றின. அந்தத் தீப்பொறிகளை வாயு தாங்கிக்கொண்டு வந்தான். வெம்மை தாங்கப் பொறாது அந்தத் தீப்பொறிகளை அக்கினி கையில் கொடுத்தான். அக்கினியும் தாங்கமுடியாது கங்கையிடம் அந்தத் தீப் பொறிகளைக் கொடுத்தது. கங்கையும் தாங்குவதற்கு ஆற்றாதவளாய்ச் சரவணப் பொய்கையில் கொண்டு சேர்த் தாள்.

சரவணப் பொய்கையில் அந்த ஆறு பொறிகளும் ஆறு குழந்தைகள் ஆயின. கார்த்திகைப் பெண்கள் அக் குழந்தை களுக்குப் பாலூட்டிப் பேணிக் காத்து வந்தனர்.

உமையம்மையாரும் சரவணப் பொய்கைக்குச் செல்ல வேண்டுமென்று திருவுளம் கொண்டார். சரவணப் பொய்கையை வந்தடைந்தார். ஆறு திருக்குழந்தைகளும் சரவணப் பொய்கையில் விளையாட்டு அயர்வதைக் கண்டு அகமகிழ்வுற்றார். ஆறு திருக்குழந்தைகளையும் எடுத்து அணைத்தார். கந்தன் தோன்றினார். அவரே கந்த சுவாமியார்.

சிவனும் உமையும் கந்தனை அணைத்து நடுவில் இருத் தினர். மூவரும் சேர்ந்து சோமாஸ்கந்தராகக் காட்சி கொடுத்தருளினார்கள்.



சோமாஸ்கந்த மூர்த்தம்

அருவமும் உருவு மாகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய

— கந்தபுராணம் —

# 4. தேவசேனாபதி

முருகன் சரவணப் பொய்கையிலே தோன்றினார். சரவணபவனென்று பெயர் பெற்றார். சரவணபவன் தாமரை மலர் போலப் பொலிவுடன் விளங்கினார். சிவனின் திருக்குமாரர் எப்போது வருவார்; சூரனிடமிருந்து எங்களை எப்போது காப்பாற்றுவார் என்று தேவர்கள் எதிர்பார்த்து இருந்தனர்.

சூரனுடைய கொடுமையோ நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. இந்திரகுமாரனாகிய சயந்தன் சிறையிலே வாடினான். இந்திரன் மறைந்து வாழவேண்டியிருந்தது. தேவர்களின் துன்பம் தாங்கமுடியாததாயிற்று.

மீண்டும் இந்திரன் சிவபெருமானிடம் சென்று முறையிட்டான். பிரமாவும், விஷ்ணுவும் சூரபன்மனுடைய கொடுமையைச் சிவனிடம் எடுத்துக் கூறினர்.

சிவபெருமான் முருகனை அழைத்தார். சூரபன்மனையும் அவனுடைய சகோதரர்களான சிங்கமுகாசுரன், தாரகாசுரன் ஆகியோரையும் அழித்துத் தேவர்களுக்கு அபயம் அளிக்கும்படி கூறினார். அவைகளுக்கு நடுநாயகமான ஞான சத்தியாகிய வேலாயுதத்தையும் வழங்கினார்.

இறைவனோடு கயிலையில் அமர்ந்திருக்கும் பேறு பெற்றவர்கள் பதினொரு உருத்திரர்கள். ஏகாதச உருத்திரர்கள் என்று அவர்களுக்குப் பெயர். இறைவனைப் போன்ற உருவத்தைப் பெற்றவர்கள். இறைவனைப் போல சடாமுடி, நெற்றிக்கண் எல்லாம் அவர்களுக்கு உண்டு. அந்த ஏகாதச உருத்திரர்கள் வாள், வில், தண்டு, தோமரம் முதலிய பதினோர் ஆயுதங்களாகி, கந்தவேளின் கரங்களில் வீற்றிருந்தனர்.

இதன் பின்னர் படைகளுக்கு நாயகமாகிய வேலாயுதத்தைச் சிவபெருமான் கந்தனுக்கு அளித்தார். ஒப்பற்ற சிறந்த படை வேலாயுதம். உலகைப் பொடிப்பொடியாக ஆக்கும் ஆற்றல் வாய்ந்தது. யார்மேல் விடுத்தாலும்



முருகன் வேலுடன் நிற்றல்

அவர்கள் வரங்களையும் தவங்களையும் அழித்துவிடும். மாயங்களை எல்லாம் தகர்த்தெறியும். தகதகவென்று ஒளிவீசும். அப்படிப்பட்ட வேலாயுதத்தை இறைவன் உண்டாக்கினர். தமது திருமகனிடம் கொடுத்தார்.

பூரண சந்திரனை ஒத்த திருமுகமும் கருணைபொழியும் திருக்கண்களும் உடைய முருகன், தமது திருக்கைகளில் வேலும் படைகளும் தாங்கி, தேவ சேனபதியாகப் போருக்குப் புறப்பட்டார்.

முழுமதி அன்ன ஆறு
முகங்களும் முந்நான்கு ஆகும்
விழிகளின் அருளும் வேலும்
வேறுள படையின் சீரும்
அழகிய கரம்ஈர் ஆறும்
அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழுமலர் அடியும் கண்டான்
அவன்தவம் செப்பற் பாற்றே

— **கந்தபுராணம்** —

# 5. சூரன் போர்

தேவசேனாபதியாகி வந்த முருகன் போர் செய்யப் புறப்பட்டார். முதலில் தாரகனுடன் போர் மூண்டது. தாரகன் சூரனின் தம்பி. யானை முகத்தை உடையவன். தன் வலிமைக்கு உதவியாக ஒரு மலையையும் சேர்த்துக் கொண்டான். அதற்குப் பெயர் கிரௌஞ்சம். தன்னை அணுகியவர்களை அது மயங்கச் செய்யும். முனிவர்களையும் மயக்கும்.

பலவிதமான ஆயுதங்களாலும் தாரகனால் முருகப் பெருமானை வெல்ல முடியவில்லை. போரின் கடுமை தாங்க முடியாத தாரகன் தான் சிவபெருமானிடத்தில் தவ மிருந்து பெற்ற படைக்கலத்தை முருகப்பெருமான்மீது ஏவினான். வந்த படைக்கலத்தை முருகன் கொடுத்தவர் திரும்பி வாங்கியதுபோல் ஏற்றுக்கொண்டார்.

தாரகன் தொடர்ந்தும் போர் புரிய முருகன் தம் திருக்கை வேலை அவன்மீது ஏவினார். அது ஒரு நொடிப் பொழுதில் தாரகனையும் கிரௌஞ்சத்தையும் பிளந் தெறிந்து முருகனுடைய திருக்கரத்தில் வந்து சேர்ந்தது.

அடுத்தாற்போல் முருகனுடன் போர்புரிந்தவன் சிங்கன். சிங்கன் தர்ம சிந்தனை உடையவன். அவன் தமையனைப் ''போர் புரியவேண்டாம்'' என்று தடுத்தான். ''வந்திருப்பவர் வெறும் பாலகனல்ல; சிவபெருமானுடைய திருக்குமாரர்'' என்று புத்தி கூறினான். மதிகெட்டு இருக்கும் நேரத்தில் இந்தப் புத்திமதிகள் சூரனின் மனத்திலே பதியவில்லை. அவற்றை அவன் புறக்கணித்துப் பேசினான்.



சூரன் போர்

எவ்வாறுயினும் தன் தமையனுக்குக் கடமை செய்ய வேண்டும் அல்லவா? சிங்கன் போர்க்களத்தை அடைந்தான். முருகன் அவனையும் வெற்றிகொண்டான். சூரன் தனித்து நின்றான்.

சூரன் சகல சிறப்புக்களும் பொருந்தியவன். அவன் நீண்டகாலமாகப் பெரும் தவம் புரிந்து இறைவனிடம் பல வரங்களைப் பெற்றவன். ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆளும் சிறப்பினையும், இந்திர ஞால மாயத் தேரையும், சக்கராயுதப் படையையும், என்றும் அழியாத உடம்பையும் இறைவன் அவனுக்குக் கொடுத்தருளினார். இந்தச் சீருஞ் சிறப்பும் அவனுக்குக் கர்வத்தைக் கொடுத்தன. ஆணவ மிகுதியினால் அசுரர்களுடைய குலப் பகைவர்களாகிய தேவர்களை அவன் வதைத்தான். இதனாலேயே போர் மூண்டது.

முருகப் பெருமானைச் சிறுவன் என்று இகழ்ந்தான், மாயப்போர் செய்தான். அவனுடைய மாயம் முழுவதையும் முருகனது வேல் நீக்கியது. முருகப்பெருமான் தமது திருப்பெரு வடிவத்தைச் சூரனுக்குக் காட்டினார். அதிலே சகல அண்ட கோளங்களும் அமைந்திருப்பதைச் சூரன் கண்டான். திகைத்தான். தொழவேண்டும் என்று நினைத்தான். ஆனால் ஆணவம் அவனைத் தடுத்தது.

இந்த நிலையில் முருகன் திருப்பெருவடிவத்தை மறைத்தார். பழையபடி போர்க்கோலம் கொண்டார். சூரனுக்கு வந்த மெய்யறிவும் போனது. பழையபடி அவனை ஆணவம் மூடிக்கொண்டது. கடும்போர் புரிந்தான். இறுதியாக நடுக்கடலில் மாயத்தால் மாமரமாகத் தோன்றினான். அப்பொழுது முருகப்பெருமான் வேற்படையை ஏவ, அது சென்று மாமரத்தை இரு கூறாக்கியது. கூறுகள் சேவலும் மயிலுமாக மாறின. முருகன் மயிலைத் தமது வாகனமாக்கிக் கொண்டார். சேவலைத் தமது கொடியிற் பொறித்துக் கொண்டார்.



சூரன் தலை



சேவலும் மயிலும் முருகன்

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியார் எல்லாம்

— கந்தபுராணம் —

# 6. முருகனுக்கு ஆறுநாள்

முருகனைப்பற்றி நாம் அறிந்தோம். அவன் மிகுந்த அழகும் அன்பும் உடையவன்; என்றும் இளமையானவன்; அறியாமையை நீக்கி அறிவை வளர்ப்பவன்.

முருகனை விசேடமாக வழிபடும் நாள் கந்தசட்டி. ஐப்பசி மாதம் பூர்வபக்கம் பிரதமை முதல் சட்டிவரை ஆறு நாட்கள் சட்டி விரதம் கொண்டாடப்படும்.

ஆறுநாட்களும் உபவாச விரதம் இருப்பர். ஆறுவது நாள் சூரன் போர் விழா நடைபெறும். ஏழாவது நாள் பாரணம் செய்து விரதத்தை நிறைவு செய்வர்.

ஆறுநாட்களும் விரதம் இருந்து முருகனை வழிபடும் அன்பர்கள் முருகனிடம் வேண்டிய வரத்தைப் பெறுவர்.

தேவர்கள் துயர்துடைத்து அசுரர்களை அழித்தவர். எங்கள் மனத்தில் உள்ள துன்பத்தை நீக்கி இன்பத்தை அருள்பவர்.

எமக்கு அருள் புரிவதற்கு வள்ளி தெய்வயானையுடன் வீற்றிருந்து அருள் செய்கிறுர்.

முருகன் கோவில்களிற் கந்தசட்டி சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. ஆலயத்திற்குச் சென்று விரதம் இருப்பவர்கள் பலர். வீட்டில் இருந்து சிலர் விரதம் அனுட்டிப்பர்.

விரதகாலத்தில் ஆலயங்களில் விசேட புராண படனம், பிரசங்கம், கூட்டு வழிபாடு ஆகியன நடைபெறும்.

முருகனுக்கு விசேட அபிடேக ஆராதனை நடைபெறும். அடியார்கள் ஆலயத்திற்குச் சென்று அபிடேக ஆராதனைகளைக் கண்டு முருகனை வழிபடுவர். மனத்தில் நினைப்பவற்றை முருகனிடம் சொல்லி மனநிறைவுடன் வழிபடுவர்.

எமது நாட்டிலே முருகனுக்குப் பல கோயில்கள் உண்டு. கதிர்காமம் மிகப் பழமையானது. சூரனுடன் போர்புரியும்போது பாடிவீடு அமைத்த ஏமகூடமே கதிர்காமம் என்று கூறுவர்.


நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கந்தவனக்கடவை முருகன் கோயில், செல்வச்சந்நிதி முருகன் கோயில், மண்டூர் முருகன் கோயில், மஞ்சவனப்பதி முருகன் கோயில் முதலான ஆலயங்கள் சிறப்பான வழிபாட்டிற்குரிய தலங்களாக விளங்குகின்றன.



ஆறுபடை வீடு — பழனி (அ)




ஆறுபடை வீடு — பழனி (ஆ)



ஆறுபடை வீடு — சுவாமிமலை (அ)





ஆறுபடை வீடு — சுவாமிமலை (ஆ)



ஆறுபடை வீடு — பழமுதிர்சோலை (அ)




ஆறுபடை வீடு — பழமுதிர்சோலை (ஆ)



ஆறுபடை வீடு — திருச்செந்தூர் (அ)




ஆறுபடை வீடு — திருச்செந்தூர் (ஆ)



ஆறுபடை வீடு — திருப்பரங்குன்றம் (அ)



ஆறுபடை வீடு — திருப்பரங்குன்றம் (ஆ)



ஆறுபடை வீடு — திருத்தணிகை (அ)




ஆறுபடை வீடு — திருத்தணிகை (ஆ)



2. இ.ஸ. 83057

# 7. பூச இனியது நீறு

சேரமான் சேரநாட்டு முடிக்குரிய வேந்தர். ஆனால் அவர் தமது அரசுரிமையைத் துறந்தார். பதிலாகத் திருவஞ்சைக்களம் என்ற திருப்பதியில் இருந்து திருத் தொண்டு புரிந்துவந்தார்.

அப்பொழுது ஒருநாள் மந்திரிமார் வந்து அரச பாரத்தை ஏற்கவேண்டும் என்று வற்புறுத்தினர்கள். அவர் கோயிலுக்குப் போய் இறைவன் திருக்குறிப்பை வேண்டினர். இறைவன் திருவுளப்படி முடிசூட உடன்பட்டார்.

முடி சூட்டிய நாளன்று அவர் வீதிவழியே யானை மீது வலம்வந்துகொண்டிருந்தார். எதிரே ஒருவன் உவர் மண் பொதி சுமந்துகொண்டு வந்தான். அவன் வரும் வழியில் சிறிதுநேரம் மழை பெய்ததால் உவர்மண் கரைந்து உடம்பில் ஒழுகியது. சேரமான் அவனைக் காணும்போது ஒழுகிய மண் காய்ந்து உடம்பு முழுவதும் திருநீற்றுப் பூச்சுப் போல் வெண்மையாக இருந்தது. சேரமான் அவனைக் கண்டதும் யானையிலிருந்து இறங்கினர். விரைந்துசென்று அவனை வணங்கி ''அடியேன் அடிச்சேரன், சிவனடியார் வேடம் நினைப்பித்தீர்'' என்ருன்.

அப்பர் பெருமானுக்குச் சூலைநோய் வந்து குடரை உறுத்தியது. வருத்தந் தாங்கமுடியாது தமக்கையார் திலகவதியாரிடம் வந்தார். வந்தவர் அவருடைய பாதங் களில் விழுந்து வணங்கி ''இவ்வருத்தம் தீர வழி சொல்ல வேண்டும்'' என்று இரந்தார். அப்பொழுது திலகவதியார் உடன் செய்த சிகிச்சை தம்பியாரைத் திருநீறு பூச வைத்ததே. அதன் பின்பே ஊரிலுள்ள திருவதிகைக் கோயிலுக்குக் கூட்டிச் சென்ருர். அங்கே ''கூற்ருயினவாறு விலக்ககிலீர்'' என்ற பதிகம் பாடினர். உடனே நோய் நீங்கியது.



சம்பந்தர் பாண்டியனுக்கு வெப்புநோய் தீர்த்தல்

பாண்டிய மன்னனுக்கு வெப்புநோய் ஏற்பட்டது. உடனே பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரியார் குலச்சிறையும் திருஞானசம்பந்தரை வரும்படி வேண்டினர். அவரும் அரசனிடம் வந்தார். ''மந்திரமாவது நீறு......'' என்ற பதிகம் பாடி, தமது கையால் திருநீறு கொண்டு வேந்தனின் உடலைத் தடவினார். வெப்பம் இருந்த இடம் தெரியாது நீங்கிற்று. வேந்தனும் உய்ந்தான்.

இந்தச் சம்பவங்களினுல் திருநீற்றின் மகிமையும், அதற்கு நாம் கொடுக்கும் மதிப்பும் விளங்குகின்றன.

விபூதியைக் காலையிலும் மாலையிலும், நீராடிய பின்னும், போசனத்திற்கு முன்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும் அவசியம் தரித்தல் வேண்டும். கனவுகண்டு எழுந்தவுடனும், மனக் குழப்பம் உற்ற வேளையிலும் திருநீறு பூசினுல் மன அமைதி உண்டாகும்.



அப்பர் திலகவதியிடம் விபூதி வாங்கல்

திருநீற்றைக் கழுவி வடித்தெடுத்துப் புதிய பானையிலே வாசனை பொருந்திய மலர்களை இட்டு வைத்தல் வேண்டும்.

பெரியவர்களிடத்திலே திருநீறு வாங்கும்போது அவர்களை முதலில் வணங்கி, வலது கை மேல்வைத்து, இடது கை கீழ்வைத்து இரு கரங்களினாலும் பயபக்தியுடன் பெற்றுக்கொள்ள வேண்டும். வாங்கிய திருநீற்றைத் தந்தவருக்கு எதிர்முகமாக நின்று அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லிக்கொண்டு நிலத்திலே சிந்தாது பூசிக்கொள்ளுதல் வேண்டும். விபூதியை அணிந்தபின் எஞ்சியதை ஒருநாளும் வாயினால் ஊதுதல் ஆகாது. திருநீறு முழுவதையும் உடலில் தரித்துக்கொள்வதே சிறந்தது.

**திருச்சிற்றம்பலம்**

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே

**திருச்சிற்றம்பலம்**



**கைமேல் கைவைத்து திருநீற்றுப் பிரசாதம் வாங்கல்.**
**திருநீறு கொடுக்குங் கை.**


# 8 மணிகள்


கோயில் மணி ''டாங், டாங்'' என்று அடித்துப் பெரும் ஓசையைக் கிளப்புகிறது. அந்த ஓசை காதுக்கு அளவிலா இனிமையைத் தருகிறது. அந்த மணியோசை எல்லோரையும் கோயிலுக்கு வாருங்கள், வாருங்கள் என்று கூப்பிடுகிறது. அதுவே கண்டாமணி. அந்த மணி யோசை கேட்டவுடனே ஆலயம் இருக்கும் திசை நோக்கி இரண்டு கைகளையும் உச்சிமேல் வைத்துக் கும்பிடுகிறோம். ஆண்டவனை மனத்திலே இருத்தி வணங்குகிறோம். பூசை தொடங்குவதற்குமுன் இது ஆயத்தமணி. கோயில்களை நோக்கி அடியார்கள் செல்கின்றனர்.

பூசை தொடங்குகிறது. பூசகர் தீபம் காட்டுகிறார். கையிலே பூசைமணி. அது 'கண கண' என்று இனிமை யாக ஒலிக்கிறது. அந்த நாதமும் தீப ஒளியும் அடியார் களின் கண்ணையும் காதையும் குளிர்விக்கின்றன. மனம் இறைவனோடு சேர்கிறது.

பூசகர் பஞ்சாராத்தி காட்டுகிறார். கொத்துமணி ஒலிக் கிறது. அதன் இனிமையான நாதமும் பூசைமணியோடு சேர்ந்து ஒலிக்கிறது. அடியார்கள் தம்மை மறந்து வழி பாட்டில் மனமுருகி நிற்கிறார்கள்.

அர்த்தசாமப் பூசையும் முடிகிறது. பூசகர் ஒவ்வொரு கதவாகப் பூட்டிக்கொண்டு வருகிறார். கடைசியாகக் கோயிலின் வாசற் கதவைப் பூட்டுகிறார். கணகணவென்று மணியோசை விடாமல் ஒலிக்கிறது. மணிக்கதவில் தொங்கும் மணிகள் எல்லாம் கதவு சாத்தும்பொழுது நெடுநேரம் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. அந்த ஒலி எங்கும் இனிமையைப் பரப்புகிறது. உலகமே மகிழ்கிறது.



கண்டாமணி

கைமணி

கொத்துமணி

கோயிற் கதவில் மணிகள்

# 9. தீபாராதனை

கோயிலிலே அடியார்கள் திரண்டிருக்கின்றார்கள். அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. எல்லோரும் மூலத்தானத்தை நோக்கியவண்ணம் நிற்கின்றார்கள். யாவருடைய உள்ளத்திலும் இறைவனைப் பற்றிய தூய நினைவே நிறைந்திருக்கின்றது. அனைவரும் இறைவன் திருநாமத்தை நாவினால் உச்சரித்தபடி இருக்கின்றார்கள்.

மூலமூர்த்தியை மறைத்திருந்த திரை சிறிது அசைகின்றது. இறைவனுக்கு அலங்காரம் முடிந்துவிட்டது என்று தெரிகிறது. அடியார்கள் ஆவலோடு தீபதரிசனத்திற்கு ஆயத்தமாகின்றார்கள்.


மணி ஓசை கேட்கின்றது. திரை விலகுகின்றது. அடுக்குத் தீபம் தெரிகின்றது. தீப ஒளியில் மூலமூர்த்தி காட்சி தருகின்றார். பூசகர் பயபக்தியுடன் தீபாராதனை செய்கின்றார்.

தீபத்தட்டு ஓம் என்ற மந்திரவடிவத்தில் அசைகின்றது. அந்த அசைவில் மூலமூர்த்தியின் பூரணத் திருவுருவை அடியார்கள் கண்டு தொழுது உள்ளம் பூரிக்கின்றார்கள்.

அடியார்கள் தலைமேற் கைகளைக் குவித்து, இறைவனை வணங்குகின்றார்கள். தீப தரிசனத்தால் உள்ளம் தூய்மை அடைகின்றது. மனத்தில் இருந்த துன்ப நினைவுகள், அச்சம் எல்லாம் நீங்கி விடுகின்றன. மனத்தில் அமைதியும் ஆறுதலும் குடிகொள்கின்றன.

மந்திரங்கள் சொல்லி வில்வமும் மலருந் தூவி, பூசகர் சுவாமிக்குப் பூசை செய்கின்றார். இவற்றையெல்லாம் கிரியை வழிபாடு என்று சொல்லுகின்றோம்.

எம் திருக்கோயில்களில் நடக்கும் கிரியை வழிபாடுகளுள்ளே சிறந்தது தீபாராதனை. இருட்டில் நாம் நடக்கும்போது சிறிது வெளிச்சத்தைக் கண்டவுடன் எமக்கு எவ்வளவு ஆறுதல் ஏற்படுகின்றது. அதுபோலத் தீப ஒளி நமக்கு இறையுணர்வைத் தந்து வாழ்வைக் காட்டி ஆறுதல் தருகின்றது.



கர்ப்பூரதீபம்
ஒற்றைத்தீபம்
அடுக்குத்தீபம்
கும்பதீபமும் தட்டுக்களும்
பஞ்சாராத்தி

# 10. மாகேசுர பூசை

ஆனந்தன் உயிர்களிடத்தில் அன்புள்ளவன். நாய், பூனை, ஆடு, மாடு, குருவி முதலியவற்றுக்குத் தீனி கொடுப்பதிற் பெருமகிழ்வு கொள்வான். பசித்து வந்த வறியவர்களுக்கும் உணவு கொடுப்பான்.

ஆனந்தனின் தந்தை பெரியபுராணம் படிப்பார். நாயன்மாரின் கதைகளை ஆனந்தனுக்கும் அவனது தங்கை கமலாவுக்கும் கூறுவார். ஒருநாள் ஆனந்தனின் தகப்பனார் இளையான்குடிமாற நாயனாருடைய கதையைக் கூறினார். அது மிகவும் சுவையாக இருந்தது. வீட்டிற்கு வந்த அடியார்களை மாறனார் அன்போடு உபசரிப்பார். ஒருநாள் இராப்பொழுது; அடைமழை. கடவுளே சிவனடியாராக மாறனார் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். வீட்டில் அரிசியும் இல்லை; எரிப்பதற்கு விறகும் இல்லை. மாறனார் அன்று வயலில் விதைத்த நெல்லை, வெள்ளத்தில் அரித்தெடுத்தார். வீட்டின் பின்நிலத்திலே முளைத்திருந்த சிறு கீரையைக் கொய்தார். சமைப்பதற்கோ விறகு இல்லை. கூரையைப் பிடுங்கி எடுத்து மாறன் மனைவியார் சமைத்து முடித்தார்.

இங்ஙனம் இளையான்குடிமாற நாயனாருடைய கதையை ஆனந்தனுடைய தந்தை கூறினார்.

பங்குனி உத்தர நாளன்று ஆனந்தன் வீட்டில் மாகேசுர பூசை நடைபெறவிருந்தது. ஆனந்தனும் கமலாவும் வீட்டைக் கழுவிச் சுத்தப்படுத்தினார்கள். மாகேசுர பூசைக்குரிய பொருட்கள் எல்லாம் ஆயத்தம் செய்யப்பட்டன.

உணவை ஆக்குவோர் நீராடித் திருநீறு பூசிச் சுத்தமும் பொலிவும் நிரம்பிக் காணப்பட்டனர். உணவும் ஆக்கப்பெற்று முடிந்தது. நேரமும் நண்பகல் ஆயிற்று

பூசைக்கு வந்தவர்கள் எல்லோரையும் ஆனந்தன் வீட்டிலுள்ளோர் சிவனடியாராகப் பாவித்தனர். ஆனந்தனும், கமலாவும், அவர்களது பெற்றோரும் அவர்களைக் கரங்கூப்பி வணங்கி வரவேற்றனர். ஒவ்வொருவருடைய பாதங்களையும் ஆனந்தன் வாசலில் தண்ணீர்கொண்டு கழுவினான். அவனது தகப்பனார் அவர்களை அழைத்துச் சென்று உள்ளே இருத்தினார். வாழையிலை வழங்கப்பட்டது. வாழையிலையில் நீர் தெளிக்கப்பட்டது.

சோறு படைத்து முடிந்ததும் ஆனந்தன் "அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்" என்ற தேவாரத்தை ஓதினான். அதன்பின் எல்லோரும் உணவு அருந்தினர்.

"தருமம் தலை காக்கும்"



மாகேசுர பூசை — அன்னதானம்

## 11. மாகேசுர பூசையின் சிறப்பு

நேற்று ஆனந்தன் வீட்டில் மாகேசுர பூசை நடந்தது அல்லவா? ஆனந்தனுடைய மனத்திற் பூசையில் நடந்தவை பல நிறைந்திருந்தன. பல கேள்விகள் அவன் மனத்தில் எழுந்தன. அவனுடைய தகப்பன் நல்ல அறிவாளி. அவரிடம் தெரியாதனவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம் என்று நினைத்தான். அவர் ஆறுதலாக இருக்கும் பொழுது அவருடன் கலந்து பேசினான்.

**ஆனந்தன்:** அப்பா, மாகேசுர பூசை என்றால் என்ன?

**தகப்பனார்:** கடவுளை வழிபடுவோரை அன்போடு பூசித்து, அவர்களுக்கு உணவு உண்ணக் கொடுத்தல்.

**ஆனந்தன்:** அப்பா, அடியார்களுக்கு மட்டும் நாம் உணவு கொடுக்கவில்லையே? குழந்தைகள், வந்த பாட்டன்மார், வறியவர்கள் எல்லோரையும் கூட உணவு கொடுத்து உபசரித்தோம் அல்லவா?

**தகப்பனார்:** ஆமாம், நன்றாய்ச் சொன்னாய். கடவுள் எல்லா உயிர்களிடத்திலும் வீற்றிருக்கின்றார். ஒருவரையும் நாம் புறக்கணிக்கக்கூடாது. பசித்து வந்தோரைப் பசி தீர்த்தலே உண்மையான கொடை.

**ஆனந்தன்:** சாப்பிடுவதற்குமுன் ''அன்னம் பாலிக்கும்'' என்ற தேவாரத்தைப் பாடினோம் அல்லவா? ஏன் அந்தத் தேவாரத்தைப் படித்தோம்?

தகப்பனர்: மகனே, இறைவன் திருவருளாலேதான் எமக்கு உணவு கிடைக்கிறது. உணவைத் தந்தருளியதற்குக் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டாமா? அதற்காகத்தான் ''அன்னம் பாலிக்கும்'' என்ற தேவாரத்தைப் படித்தோம்.

ஆனந்தன்: ஏன் அப்பா சாப்பாட்டை வாழையிலையிற் பரிமாறினேம்?

தகப்பனர்: வாழையிலையிற் சாப்பிடுவது தூய்மையும் புனிதமும். சாப்பிட்டு முடிந்தவுடன் இலையை எடுத்து எறிந்து விடலாம். ஒருவர் சாப்பிட்ட எச்சில் இலையில் இன்னெருவர் சாப்பிட வேண்டியதில்லை. அன்றியும் ஒருவர் உபயோகித்த இலையை ஆடு மாடுகள் சாப்பிட்டுப் பசி ஆறலாமே.

வாழையிலைக்குப் பதிலாகத் தாமரை இலை, கல்லை முதலியவற்றையும் பயன்படுத்தலாம்.

ஆனந்தன்: நைவேத்தியம், பிரசாதம் என்ற சொற்களின் பொருள் என்ன?

தகப்பனர்: சுவாமிக்குப் படைக்கும் உணவுப்பண்டங்களை நைவேத்தியம் என்போம்.

சுவாமிக்குச் சாத்திய விபூதி, சந்தனம், வில்வம் முதலியவற்றையும், அவருக்கு அர்ப்பணித்த தின் பண்டங்களையும் பிரசாதம் என்பர். அவை பக்தர்களிடம் பகிர்ந்து கொடுக்கப்படும். பிரசாதம் எனின் திருவருள் எனப் பொருள்படும்.

ஆனந்தன்: சரி, அப்பா, நாம் ஏன் சைவச் சாப்பாட்டை மட்டும் சாப்பிடுகிறோம்?

தகப்பனார்: பார்த்தாயா? இது நல்ல கேள்வி. எல்லாப் பிராணிகளிடத்தும் நாம் அன்போடும் இரக்கத்தோடும் நடந்துகொள்ளல்வேண்டும். ஒரு பிராணியையும் நாம் துன்பப்படுத்தக் கூடாது.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்

— திருக்குறள் —

# 12. பாத யாத்திரை

பருத்தித்துறைப் பட்டினச் சதுக்கத்தில் "அரோகரா" என்ற பேரொலி பெருக்கெடுக்கிறது. நூற்றுக்கு மேற்பட்ட அடியார் கூட்டம் ஒன்று பாத யாத்திரையாகக் கதிர்காமத்திற்குப் புறப்படுகிறது. பெருந்திரளாக ஊர்ச் சனங்கள் சுற்றிநின்று ஆசி கூறி வழியனுப்புகின்றனர்.

சற்று நேரத்தில் அடியார் கூட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக் கரையைநோக்கி நகரத் தொடங்குகிறது. எளிய உடையும், அழுத்திய திருநீற்றுப் பூச்சும், முழுமதி போன்ற சந்தனப் பொட்டும் அவர்களுக்கு என்றுமில்லாத புனிதத்தைக் கொடுக்கிறது.

தலையிலே தாங்கும் பொதி, அடியார்களுடைய சுமை நிறைந்த யாத்திரைக்கு ஓர் அறிகுறி. பொதியில் அற்பமான மாற்றுத் துணிகள் இருக்கின்றன. அத்துடன் குடிமனை இல்லா இடங்களிலே சமைத்துச் சாப்பிட அரிசியும் மாவும், உப்பும் புளியும், வற்றலும் வடகமும் இருக்கின்றன.

பொழுது சாயும் நேரமாகையால் அவர்களுடைய மத்தியிலும் மனத்திலும் அமைதியும் சாந்தமும் நிலவுகின்றன. வற்றாப்பளை அம்மன் கோயிலில் வைகாசி விசாக முழுமதித்தினத்தன்று நடைபெறும் பொங்கலிலே கலந்து கொள்ள வேண்டும். அதுவே அவர்களுடைய உடனடியான குறிக்கோள்.

பருத்தித்துறையிலிருந்து வற்றாப்பளைக்குக் கிட்டத்தட்ட நான்கு நாள் பயணம். காலையிலும் மாலையிலும் கரையோரமாக நடப்பார்கள். அவர்களுடைய வழி

காடும் மேடுந் தாண்டிச் செல்லும். இடையிலே ஊர்மனை அற்பசொற்பம். வழியானது பெரும்பாலும் மனிதனும் விலங்கும் பழக்கிய ஒற்றையடிப் பாதை.


நண்பகலிலே மரநிழல்களில் இளைப்பாறுவார்கள். இரவில் வாடிகளிலோ வெளிநிலங்களிலோ தங்குவார்கள்.

வைகாசி விசாகத்தன்று முல்லைத்தீவு வட்டாரத்திலுள்ள வற்றாப்பளை அம்மன் கோயிலிலே பொங்கல் திருக்குளிர்ச்சி. அங்கு வந்து சேர்ந்த பாதயாத்திரை அடியார்கள் ஊர்ச் சனத்துடன் சேர்ந்து பொங்கல் விழாவிற் கலந்துகொள்வார்கள்.

பொங்கலன்று கோயில் மணிவிளக்கில் கடல்நீர் மொண்டு வந்து இட்டு விளக்கெரிப்பார்களாம். இதைக் கோயிலில் அன்று குழுமி வடியும் மக்கள் பூரணமாக நம்புகிறார்கள். இது அடியார் கூட்டத்தில் உறைப்பான பத்தியையும் உண்டுபண்ணுகிறது.

பொங்கல் முடிந்ததும் அடியார் கூட்டம் திருமலை நோக்கி நடக்கிறது. இங்கிருந்து பாணமை போகும் வரை அடிக்கடி ஊர்கள்தோறும் அடியார்கட்கு அன்னதானம் வழங்கப்படும். இன்னும் ஊருக்கு ஊர் யாத்திரீகர்கள் சேர்ந்து அடியார் கூட்டம் பெருகிவரும்.

திருமலையிலிருந்து சென்ற அடியார்கூட்டம் மூதூர்ப் பகுதியில் வெருகல் ஆற்றங்கரையிலே கோயில்கொண்டிருக்கும் சித்திரவேலாயுத சுவாமியைத் தரிசிப்பர். ஆற்றின் அக்கரையில் மட்டக்களப்புப் பிரதேசம் தொடங்குகிறது. அங்கிருந்து கிழக்குக் கரையோரமாக அடியார் கூட்டம் வழிநடக்கும். வழியில் சிற்றாண்டியில் வீற்றிருக்கும் முருகனையும், பின் மாமாங்கப் பிள்ளையாரையும், நெடுஞ்சாலையிலிருந்து சற்று உட்சென்று மண்டூர் வேலனையும், திருக்கோயிற் பதி வாழும் செந்தமிழ் முருகனையும் அடியார்கள் தரிசித்து இன்புறுவர்.


பருத்தித்துறை
முல்லைத்தீவு
வற்றாப்பளை
திருகோணமலை
சம்பூர்
மூதூர்
கிளிவெட்டி
தோப்பூர்
வாகரை
வெருகல்
பனிச்சங்கேணி
வாழைச்சேனை
ஏறாவூர்
மட்டக்களப்பு
குருக்கள்மடம்
களுவாஞ்சிக்குடி
பாண்டிருப்பு
காரைதீவு
அக்கரைப்பற்று
திருக்கோயில்
மொனருகலை
பொத்துவில்
வெள்ளவாயா
பாணமை
கதிர்காமம்
திஸ்ஸமஹாராம
கதிரமலை

மட்டக்களப்புப் பிரதேசத்தின் தென்கோடியிலே பாணமைப் பகுதி இருக்கிறது. அங்கிருந்து அடியார்கள் கல்லும் முள்ளுந் தைக்கக் காட்டு மார்க்கமாகக் கதிர்காமப் பெருமானை நாடிச் செல்வர். இவ்வாறாக, ஆடிப் பெரு விழாக் காலத்தில் அவர்கள் கதிர்காமத்தை அடைவர்.

அடியார்கள் யாத்திரை செய்யும்போது வீட்டையும் வாசலையும், ஊரையும் உறவினரையும் மறந்திருப்பர். அவர்களுக்கு முருகனைப் பற்றிய சிந்தனை அல்லாது வேறெதுவுங் கிடையாது. நடக்கும்போது 'அரகர'வொலி, ஓய்ந்தால், முருகன் புகழ் பாடலும் அவன் திருவிளை யாடல்களைக் கூறுதலும் இடம்பெறும்.

நூறாகத் தொடங்கிய அடியார் கூட்டம் ஆயிரமாக மாணிக்க கங்கைச் கரையில் வந்து சேரும். இவ்வாறு நாட்டிலுள்ள பல இடங்களிலிருந்தும் அடியார் கூட்டம் பெருவிழாக் காண வந்து சேரும்.

# 13. கதிர்காமம்

உறுகுணைப் பகுதியில் மாணிக்க கங்கைக் கரையிலே கதிர்காமத் தலம் இருக்கிறது. அங்கே முருகப் பெருமான் விரும்பி உறைகின்றான்.

கதிர்காமம் முருகன் திருக்கோயில் என்றாலும் அங்கே முருகனுடைய சிலை கிடையாது. கோயிலின் கருவறை என்று சொல்லவேண்டிய இடம் திரைச்சீலையால் மூடப் பட்டிருக்கும். கோயிலிற் பூசை செய்வோர் ஏனைய சைவ ஆலயங்களிற்போலப் பிராமணர்களோ, சைவக் குருமாரோ அல்லர். அவர்களைக் கப்புறாளைகள் என்பர்.

பூசைநேரத்தில் அன்றைய தினம் பூசைசெய்யும் கப்புறாளை திரைச்சீலைக்கு இப்பால் நின்று பெருமானுக்கு வணக்கஞ் செலுத்துவர். அதன்பின் உள்ளே சென்று வாய்கட்டிப் பூசை புரிவார். இந்தப் பூசையைக் கூடி நிற்கும் அடியார்கள் காணமுடியாது. பூசை நடப்ப தாகக் கற்பனை செய்துகொள்ள வேண்டியதுதான்.

திருவிழாக் காலங்களில் ஒரு பெட்டி வெளியே கொண்டுவரப்படும். அது மூடியவாறே இருக்கும். அதனை யானைமேல் ஏற்றி வீதிவலம் வரப்படும். பெட்டியினுள் ஒரு மந்திரிக்கப்பட்ட சக்கரம் இருப்பதாக நம்பப்படுகிறது.

கோயிலிலே ஆண்டுப் பெருவிழா ஆடி அமாவாசை யன்று கொடியேற்றத்தோடு தொடங்கும். தொடர்ந்து பதினைந்து நாள்கள் விழாக் கொண்டாடி முழுமதியோடு கூடிய திருவோண நாளிலே முடியும்.

விழாக்காலத்திலே பல்லாயிரக் கணக்கான அடியார் கள் வந்து முருகப் பெருமானை வணங்குவார்கள். சுவாமி உலாவரும்போது அவர்கள் நெருங்கிச் சுவாமியைச் சேவித் துச் செல்லுதல் மனத்தை உருக்குங் காட்சி.

சுவாமிக்கான கோயிலை விட வள்ளியம்மன், தெய்வ யானை அம்மன் ஆகியோருக்குத் தனிக் கோயில்கள் உண்டு. சுவாமி கோயிலைப் போலல்லாது இவற்றிலே சிலைகள் இருக்கின்றன.

ஆண்டுப் பெருவிழாவைத் தவிரப் புத்தாண்டிற்கும் திருக்கார்த்திகைக்கும் விழாக்கள் கொண்டாடப்படும்.

திருக்கார்த்திகையன்று சுவாமி சந்நிதானத்திலே பொழுதுபடும் நேரத்திலே சொக்கப்பனை எரிக்கப்படும். அதன்பின் சுவாமி எழுந்தருளி வள்ளியம்மன் கோயி லுக்குப் போவார். நள்ளிரவின்பின் சுவாமி திரும்பவுந் தன்னிருக்கைக்கு வருவார். சுவாமி திரும்புவதற்கு முன் தேனுந் தினைமாவும் பிரசாதமாக வழங்கப்படும். இந்தப் பிரசாதத்தைப் பெறுவதற்கு அடியார்கள் நாழிகைக் கணக்காய்ப் பொறுமையுடன் காத்திருப்பர். என்ன வரம் வேண்டிக் காத்திருக்கிறார்களோ அந்த வரம் அப்பிரசாதம் உண்டாற் சித்திக்கும் என்பதொரு நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது.


கதிர்காமத்திற்குப் பல மதத்தினரும் வந்து முருகப் பெருமானைச் சேவித்துச் செல்லுதலை நாம் காணலாம். இத்தலத்திற்கான தனிச்சிறப்பு அது.

கதிர்காமம் அணுகுவதற்கு அரிய காட்டுப் பிர தேசத்தில் இருக்கிறது. இக்காரணத்தினாலோ, முருகப் பெருமானின் திருவருட் சிறப்பினாலோ அங்குச் செல்பவர் விரும்பிச் சங்கற்பத்துடன் செல்வர். அதனால் அவர்க ளுடைய பத்தி வைராக்கியம் அளப்பரியது.

கதிர்காமம் மிகப் பழமையான தலம். சரித்திரத் திற்கு அப்பாற்பட்ட காலந்தொட்டு இத்தலம் நிலவி வருகிறது.

கதிர்காமத்திற்கு அருணகிரிநாதர் திருப்புகழ் பாடி யிருக்கிறார்.

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே



# 14. கொழும்பில் முருகன் திருஉலா

கொழும்பிலே பல முருகன் கோயில்கள் இருக்கின்றன. செல்வம் நிறைந்த செட்டியார் தெருவிலுள்ள கதிரேசன் கோயிலிலும் முருகன் கோயில்கொண்டிருக்கிறான்.

ஆடி மாதத்திலே பௌர்ணமிக்கு இரண்டு நாள் முன்பு இங்கிருந்து முருகப்பெருமான் அழகிய தேரிலே எழுந்தருளிப் பம்பலப்பிட்டிக் கதிரேசன் கோயிலுக்குச் செல்லுவார். அப்பொழுது வழி எங்கணுந் திருவிளக்கும் நிறைகுடமும் பெருமானை வரவேற்கும். ஆங்காங்கு மலை மலையாகத் தேங்காய்க் குவியல்கள் காணப்படும். இளைஞர் கள் அவற்றைச் சிதறுகாய் அடித்துக் குதூகலிப்பர். இவ்விழாவை ஆடிவேல் விழா என்று மக்கள் கூறுவர்.

இதே காலத்தில் கதிர்காமத்தில் ஆண்டுவிழாக் கண்டு பக்தர்கள் வீடு திரும்புவர். வழியிற் கொழும்பிலே இரண் டொருநாள் தங்கிப் பம்பலப்பிட்டியிற் கொலுவீற்றிருக்கும் முருகப்பெருமானையுங் கண்டு களிப்பர்.

பம்பலப்பிட்டியில் இரண்டு நாள் தங்கி மூன்றும் நாள் பொழுதுசாயும் நேரம் முருகப்பெருமான், செட்டியார் தெரு நோக்கிப் புறப்படுவார்.

பெருமானின் திருவுருவம் வைர நகைகளாலும், அழகிய பூ மாலைகளாலும், பட்டுப் பீதாம்பரங்களாலும் அலங் கரிக்கப்பட்டிருக்கும். அவர் வீற்றிருக்கும் தேர் நூற்றுக் கணக்கான மின் விளக்குகளால் வண்ணஞ் செய்யப்பட் டிருக்கும். தேரை இழுக்கும் இரு காளை மாடுகளும் நெற்றி யிலே சந்தனம் குங்குமம் அணிந்து விறுநடை போட்டுச் செல்லும். முன்னே கொடி குடை ஆலவட்டம் தாங்கிய சேவகர்கள் வரிசை வரிசையாக நடப்பர். இக் கோலா

கலக் காட்சிக்கு அறுதியிட்டு வாத்தியக் குழுவினர் இசை வழங்கிக்கொண்டு செல்வர். இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு சைவ மக்கள் களிப்பும் பெருமையும் அடைவர்.

ஆண்டுதோறும் கொழும்புவாழ் மக்கள் வேல் விழாவை ஆவலோடு எதிர்பார்ப்பர். பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் வேல்விழாக் காலம் அருள்பெறுவதோடு களியாட்டத்திற்கும் குதூகலத்திற்கும் உரிய காலம்.



ஆடிவேல் விழா

விழாக் காலத்தில் அயலூர்களிலிருந்து கரும்புக் கட்டுகள் வண்டி வண்டியாக வந்து குவியும். வீதி ஓரங்களில் மணிக்கடைகள் அடுத்தடுத்து அமைந்திருக்கும். ஆண் குழந்தைகள் கரும்பு தின்றபடி குதூகலித்துத் திரிவார்கள். பெண்பிள்ளைகள் விதம் விதமான நிறங் கொண்ட வளையல்கள் வாங்கி வரிசை வரிசையாகக் கையில் அணிந்து மகிழ்வார்கள்.

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்

— திருமுருகாற்றுப்படை —
(பிற்சேர்க்கை)


# 15. முருகன் தலம் மூன்று

யாழ்ப்பாணத்துச் சைவ மக்களின் சிந்தனையில் நல்லூர்க் கந்தன் என்றும் குடிகொண்டிருக்கிறான். கந்தன் கோயிலிலே கொடியேறித் திருவிழா நடக்கும்போது யாழ்ப்பாணத்துச் சைவ மக்களின் வீடுகளில் ஒரே புனிதம். வெளியூர்களிலே தொழில் பார்க்கும் மக்கள் தேர் தீர்த்தத் திருவிழாக்களுக்காவது, ஊருக்கு வருவர்.

இக் கோயில் தொடக்கத்திலே சிறிதாகத்தான் இருந்தது. முருகன் திருவருளால் இது காலத்துக்குக் காலம் வளர்ச்சி பெற்றது. இன்று இரண்டு வாயிற் கோபுரங்களும் நான்கு மணிக்கூட்டுக் கோபுரங்களும் தொலைவிலேயே தென்படுகின்றன. இவற்றைவிட நான்கு புறமும் படித் துறைகள் அமைந்த விசாலமான தீர்த்தக் கேணியும், அகலமான தேரோடும் வீதிகளும் இருக்கின்றன.

கோயிலின் நான்கு கண்டாமணிகளும் மிகப்பெரியவை. ஓசை நயமுடையவை. காலையில் விநாடி தவறாது சரியாக நான்கு மணிக்குக் கண்டாமணி ஒன்று அடிபடும். இது ஐந்து மைல் தொலைவிற்குக் கேட்கும். திருவனந்தல் பூசை அரைமணி நேரத்தில் நடக்கும் என்பதை இது அறிவிக்கும்.

கோயிலின் பெருவிழா இருபத்தைந்து நாள்கள் நடைபெறும். ஆவணி அமாவாசையன்று தீர்த்த உற்சவத்தோடு முடியும். பத்தாந் திருவிழாவன்று முருகப்பெருமான் அழகிய மஞ்சத்தில் வீதி வலம் வருவார். ஆறுமுகப் பெருமான் சித்திரத்தேரிற் பவனி வருதல் கண்கொள்ளாக் காட்சி. அடுத்தநாள் தீர்த்த உற்சவத்தின்போது பஞ்ச மூர்த்திகள் வெள்ளி வாகனங்களில் எழுந்தருளுங் காட்சி பார்ப்பவர் மனத்தைப் பரவசப்படுத்தும்.




நல்லூர்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைப்போன்று சரித்திரப் பெருமை வாய்ந்தது.

சோழ அரசன் ஒருவனுக்கு மாருதப்புரவீகவல்லி என்ற பெயருடைய மகள் ஒருத்தி இருந்தாள். அவளுடைய முகம் குதிரை முகத்தின் சாயல் கொண்டிருந்தது. இது அவளுக்கும் அரசனுக்கும் கவலையைக் கொடுத்தது.

அவள் கவலை நீங்க விரதங்கள் இருந்தாள். யாத்திரைகள் சென்றாள். ஒருபொழுது ஈழத்திற்கு வந்து யாழ்ப்பாணத்திலே கீரிமலையில் இருந்த நகுல முனிவரைச் சந்தித்து வணங்கினாள். முனிவர் சொற்படி கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி நகுலேச்சரப் பெருமானை வணங்கினாள். என்ன வியப்பு! குதிரைமுகம் நீங்கிப் பேரழகுடன் விளங்கினாள். நடந்தவற்றைத் தன் தந்தையாருக்கு அறிவித்தாள்.

அரசன் மிக்க மகிழ்ச்சி கொண்டான். முருகப்பெருமானின் சிலை ஒன்றை மகளுக்கு அனுப்பி வைத்தான். சிலை மரக்கலத்திலே வந்து சேர்ந்தது. சிலையை இறக்கிய இடமே



மாவிட்டபுரம்

இன்று காங்கேசன்துறை என்ற பெயருடன் வழங்குகிறது. சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஆறு பொறிகளையும் கங்காநதி சரவணப் பொய்கையில் சேர்த்தது அல்லவா? அதனால் முருகனுக்கு காங்கேயன் என்ற பெயரும் உண்டாயது.

மாவிட்டபுரத்து முருகன் கோயில் இன்று பெரிய கோபுரத்துடன் வளமான ஆலயமாகத் திகழ்கிறது.

ஆண்டுதோறும் இருபத்தைந்து நாள்கள் பெருவிழா நடக்கும். ஆடி அமாவாசையன்று தீர்த்த விழா. அன்று சுவாமி வள்ளி, தெய்வயானையுடன் இரண்டு மைல் தொலைவிலுள்ள கீரிமலைக் கடற்கரைக்கு எழுந்தருளுவார். ஆயிரக் கணக்கான பக்தர்கள் சுவாமியைச் சூழ்ந்து சேவித்துச் செல்வார்கள்.

மாவிட்டபுரத்திலிருந்து ஏறக்குறைய பத்துமைல் தொலைவிலே தொண்டைமான் ஆற்றங்கரையிலும் முருகன் விரும்பி உறைகின்றான். இந்த ஆலயம் செல்வச் சந்நிதி எனப்படும். இங்கே கோயில் சிறியது. ஆனால் சூழலின் இயற்கை வனப்பு அளப்பரியது.

இக்கோயிலின் கருவறையில் வடிவேல்தான் காட்சி தருகின்றது. கதிர்காமம், மண்டூர் ஆகிய தலங்களிற் போல இங்கும் பூசகர் மஞ்சள் நிறச் சீலையினால் வாய் கட்டிப் பூசை செய்வார். தினமும் நூற்றுக் கணக்கான மக்கள் இணையற்ற வடிவேலைத் தொழுது வேண்டிய வரம் பெற்றுச் செல்கிறார்கள். செல்வச் சந்நிதியில் ஆண்டுப் பெருவிழா ஆவணி மாதத்தில் நடைபெறும்.



செல்வச் சந்நிதி

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங்
கோடன் மயூரமுமே.

— கந்தரலங்காரம் —

# 16. குறிஞ்சிக் குமரன்

மகாவலி ஆற்றின் கரையோரத்தில் வானளாவிய மலைத்தொடர்கள். தொடரிலுள்ள குன்று ஒன்றின் உச்சியிலே குறிஞ்சிக் குமரன் கோயில் உண்டு. குறிஞ்சி என்ற சொல் மலையையும் மலை சார்ந்த நிலத்தையும் குறிக்கும்.

கோயிலின் அருகே நின்று பார்த்தாற் கண்கொள்ளா அழகு காட்சியளிக்கும். ஒரு புறம் பேராதனைப் பூங்கா. மறுபுறம் பசும்புற்றரைகள் தோன்றும். செழித்து வளர்ந்த மரங்களும் தோன்றும், குன்றின் அடிவாரத்திற் பல்கலைக் கழகக் கட்டடங்களைக் காணலாம்.

சுற்றுப் புறத்திற் சலசல என்று அருவிநீர் ஓடும். இது ''சரவணபவ'' என்று ஒலிப்பதுபோல இருக்கும். மரங்களினூடே வீசும் இனிய தென்றல் ''ஓம்'' என்று இசைக்கின்றது. ஆங்காங்கே தோன்றும் பச்சைப்பசேல் என்ற சிறு பற்றைகள் மயூரங்கள் மேய்வதுபோலக் காட்சி அளிக்கின்றன. அடியில் விரிந்து ஒடுங்கிச் சென்று கூரியனவாய் முடியும் மலைப் பிரதேச மரங்கள் முருகன் வடிவேலை நினைவூட்டுகின்றன.

எழில்மிகு சூழலிற் குறிஞ்சிக் குமரன் எழுந்தருளியிருக்கின்றார். அங்கிருந்து அவர் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் திருவருள் சொரிகின்றார். அவர்களுடைய அறிவை விரிவடையச் செய்கின்றார். இது வியப்பன்று.

அவர் ஞானபண்டிதர். தம் தந்தைக்கே பிரணவப் பொருளை உபதேசித்துச் சுவாமிநாதனாக விளங்கியவர்.

குமரன் திருச்செந்தூரிலும், திருப்பரங்குன்றிலும், திருவாவினன்குடியிலும், திருத்தணிகையிலும், சுவாமி மலை

யிலும், கதிரைமலையிலும் கோயில்கொண்டு விளங்குகின்றார். இவற்றைவிடக் குன்றுதோறாடலும் இவருக்குரியதென்பர். எனவே, குறிஞ்சிக் குமரனைக் குன்றுஒன்றில் விரும்பி வீற்றிருந்து திருவிளையாடல் புரிகின்றார் என்பது ஆச்சரியப்படக்கூடியதா?

முருகன் கலியுகவரதன். எங்கள் யாவரையும் ஆண்டருள் புரிகின்றார். ஆயினும் குறிஞ்சிநிலத்துக்கே சிறப்பான தெய்வம். அன்பு சொரிந்து தம்மை வழிபடும் அடியவர்களின் நெஞ்சங்களில் எழுந்தருளியிருந்து அருள்புரிகின்றார்.



பேராதனைக் குறிஞ்சிக் குமரன் கோயில்

# 17. சிவனை மறந்த முனிவர்கள்

தாருகா வனத்திலே சில முனிவர்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் வேதங்களைக் கற்றவர்கள். வேதத்தில் வரும் மந்திரங்களைச் சரியாக உச்சரிப்பதில் வல்லவர்கள். யாகங்கள் செய்யும் முறைகளெல்லாம் கற்றுத் தேர்ந்த வர்கள். இவ்வளவு பெருமைகளைப் பெற்றிருந்தும், அவர்கள் அடிப்படையான ஓர் உண்மையை மறந்துவிட்டார்கள். இவையெல்லாம் இறைவனை அடைய வழிசெய்பவை என்று எண்ணினார்களில்லை. இறைவனுடைய திருவருளினாலே தான் தமக்கு இத்தகைய ஆற்றல்கள் வந்து சேர்ந்தன என்பது அவர்களுடைய சிந்தனையிற் படவில்லை.

சிவபெருமானை அழிக்கக் கொடிய புலியொன்றை ஏவினர். சிவன் புலியின் தோலை உரித்துத் தமது ஆடையாக அணிந்து கொண்டார். யானையொன்றை அனுப்பினார்கள். அதன் தோலும் இறைவனுக்குப் போர்வையாயிற்று. நெருப்புப் பந்தொன்றை வீசினார்கள். அந்தப் பந்தைச் சிவன் கையில் ஏந்திக்கொண்டார். பாம்பை அனுப்பினார்கள். அதைத் தமது ஆபரணமாக்கிக் கொண்டார். பூதங்களை அனுப்பினார்கள். அவற்றைத் தம் கணங்களாக்கிக் கொண்டார். முயலகன் என்ற ஒரு கொடிய குறளனை அனுப்பினார்கள். சிவன் அவனைத் தமது வலது காலுக்குக் கீழே போட்டு மிதித்துக்கொண்டார். இங்ஙனம் முனிவர்கள் சிவனை அழிக்க அனுப்பியவை ஒன்றும் பலிக்கவில்லை.

முனிவர்கள் தம் தவறுகளை அறிந்தார்கள். ஆண்டவன் பெருமையை உணர்ந்தார்கள்.

'எங்களது அறியாமையால் நாங்கள் செய்த இந்தக் குற்றங்களை மன்னிக்கவேண்டும். எமக்குக் கருணை காட்ட வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டனர். கருணைக் கடலாகிய சிவபெருமானும் அவர்களை மன்னித்து அருளினர்.



நடராசப் பெருமான்

# 18. குறுமுனி

அகத்தியர் மிகவும் குறுகிய வடிவம் உடையவர். அதனால் அவரைக் குறுமுனி என்றும் அழைப்பர். அவர் தோற்றத்திலே கட்டையர் என்றாலும் தவத்தால் வலிமை பெற்றவர். அறிவில் ஆயிரம்பேர் சேர்ந்தாலும் அவருக்கு இணையாக மாட்டார்கள்.

இமய மலையிற் பார்வதி பரமசிவன் திருக்கலியாணத் திற்கு ஆயத்தம் நடந்தது. திருக்கலியாணத்திற்குத் தேவர்கள் எல்லோரும் வந்து நெருங்கினர். பாரந் தாங் காது வடதிசை தாழ்ந்தது. தென்திசை உயர்ந்தது. இதைக் கண்டு தேவர்கள் நடுங்கினர். மக்கள் அஞ்சினர்.

இதனை அறிந்த சுவாமி புன்முறுவல் செய்தார். நந்தியெம் பெருமானைக் கூப்பிட்டார். ''அகத்தியனை அழைத்து வா'' என்றார். அகத்தியரும் வந்து சுவாமிக்கு முன் பணிந்து நின்றார். சுவாமி அவரைப் பார்த்து. உலகத்திலே சமநிலை ஏற்பட நீ தென்திசைக்குப்போவாய்'' என்று சொல்லியருளினார்.

திருமால், பிரமன், இந்திரன் முதலியோர் இருக்க எனக்கு இந்தப் பேறு கிடைத்ததே என்று அகத்தியர் பெருமைப்பட்டார். ஆனால் அவருக்கு ஒரு கவலை. '' திருமணக் காட்சி காணமற் போகவேண்டுமே'' என்று வருந்தினார். ''கவலைப்படாது போ, இது உன்னாலேதான் முடியும். அங்கே வருவோம்'' என்று சுவாமி ஆறுதல் கூறி அனுப்பினார்.

அகத்தியர் வரும்வழியில் விந்திய மலையின் கொட் டத்தை அடக்கினார். அதனைப் பாதாளம் செல்லும்படி செய்தார்.



அகத்தியர்

வில்லவன், வாதாவி என்ற அசுரர்கள் அந்த வழியாற் செல்லும் முனிவர்களுக்குப் பெருந் துன்பம் செய்து வந் தார்கள். அகத்திய முனிவர் வந்துகொண்டிருந்தார். இவர்கள் இருவரும் அவரை அழைத்து உபசரிப்பது போலப் பாசாங்கு செய்தனர். பின்னர் வழக்கம்போல அகத்திய முனிவரைக் கொல்வதற்குச் சூழச்சி செய்தனர். ஆனால் அகத்தியரிடம் அவர்களுடைய சூழ்ச்சி பலிக்க வில்லை. அகத்தியர் அவ்வசுரர்களின் வலிமையை அழித்தார். அவ்வழியே செல்லும் முனிவர்களுக்கு ஏற் பட்ட துன்பத்தை நீக்கினார்.

அதன்பின்னர், அகத்தியர் வளம் நிறைந்த தென்னாடு வந்து சேர்ந்தார். அங்கே பொதிய மலையில் அமர்ந்தார். அப்பொழுது உலகம் முன்பு போலச் சமநிலை பெற்றது. முனிவரின் பெருமையை எல்லோரும் அறிந்தனர்.

சுவாமியும் வாக்களித்தபடி திருமணக் காட்சியை அகத்திய முனிவருக்குக் காட்டியருளினார். அவரும் அதைக் கண்டு மகிழ்ந்தார்.

# 19. ஏடு காத்த நம்பி

திருநாரையூரிலே பொல்லாப் பிள்ளையார் கோயில் உண்டு. பிள்ளையாருடைய சிலை தானாகத் தோன்றியது. சிற்பி செதுக்கியதன்று. பொள்ளாத பிள்ளையார் பொல்லாப் பிள்ளையார் எனப் பெயர் பெற்றார்.

ஒருபொழுது பிள்ளையாரின் பூசகர் வெளியூர் சென்றிருந்தார். அவருடைய மகன், நம்பி, அவருக்குப் பதிலாகப் பூசை செய்தான். நம்பி நிவேதித்த உணவைப் பிள்ளையார் உண்டாரில்லை.


நம்பி மிகச் சிறியவன். பிள்ளையார் தான் படைத்த உணவை உண்ணாததை இட்டு மனம் நொந்தான். உண்ணும்படி பிள்ளையாரைக் கெஞ்சினான். பிள்ளையார் உண்டருளினார்.

இந்த நம்பியே நம்பியாண்டார்நம்பி என்று பெயர் பெற்ற பக்தர் ஆவர்.

நம்பிக்குப் பிள்ளையார் அருளிய செய்தி எங்கும் பரவிற்று. சோழ மகாராசாவும் இதனை அறிந்தார். அவர் தேவாரத் திருவேடுகளைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தார். அதில் அவ்வளவு வெற்றி பெறவில்லை. நம்பியிடம் கேட்போம் என்று திருநாரையூருக்கு வந்தார்.

நம்பி அரசனின் விருப்பத்தை அறிந்தார். பிள்ளையாரிடம் தேவாரத் திருவேடுகளை எங்குப் பெறலாம் என்று கேட்டிறைஞ்சினார்.

''நம்பி, சிதம்பரக் கோயிலில் ஏடுகள் இருக்கின்றன'' என்று பிள்ளையார் அறிவித்தார்.



ஏடு கண்டெடுத்தல்

அரசனும் நம்பியும் சிதம்பரஞ் சென்றனர். அங்கே கோயிலில் ஓரறையில் தேவாரத் திருவேடுகள் வைத்துப் பூட்டப்பட்டிருந்தன.

தேவார முதலிகள் அங்கு எழுந்தருளினால் மட்டுமே அந்த அறையைத் திறக்கலாம் என்று கோயிற்காரர்கள் கூறினார்கள். தேவார முதலிகள் என்று குறிப்பிட்டது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய மூவரையுமே. உடனே அரசன் ஆணைப்படி இம் மூவருடைய திருவுருவச் சிலைகளும் கொண்டுவரப்பட்டன. கதவு திறந்தது.

தேவாரச் சுவடிகளை எடுப்பதற்கு நம்பி ஆவலோடு விரைந்தார். அந்தோ! ஏடுகள் கறையான் புற்றினால் மூடப்பட்டிருத்தலை அரசனும் நம்பியும் கண்டு ஏங்கினர். எண்ணெய் ஊற்றி, மண்விலக்கி, நம்பி அரிபடாது எஞ்சிக் கிடந்த ஏடுகளை எடுத்தார். இறைவன் வாக்கு ஒன்று கேட்டது.

> "இந்நாட்களுக்கு ஏற்காதன செல்லரித்துப் போயின. ஏனையவை எஞ்சின."

இவ்வாக்கு அரசனுக்கும் நம்பிக்கும் ஆறுதல் அளித்தது.

நம்பி இறைவன் திருவருளை வியந்தார். ஏடுகளை எடுத்துப் பார்த்தார். அவை மூவர் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் எழுதப்பட்ட ஏடுகளாக இருப்பதைக் கண்ணுற்றார். மிகுந்த மகிழ்ச்சியுடன் கீழே விழுந்து வணங்கினார். அவற்றைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

இறைவனை நினைத்துக்கொண்டு அவ்வேடுகளை ஒழுங்கு படுத்தும் பணியில் ஈடுபட்டார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் ஆகிய மூவருடைய தேவாரங்களையும் பிரித்துத் திருமுறைகளாக வகுத்தார். திருஞானசம்பந்தருடைய தேவாரங்களை எல்லாம் ஒருங்கு



ஏடு காத்த நம்பி

திரட்டி முதல் மூன்று திருமுறைகளாக வகுத்தார். திருநாவுக்கரசருடைய பாடல்களை அடுத்த மூன்று திருமுறைகளாக வகுத்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பாடல்களை ஏழாவது திருமுறையாக ஆக்கினார்.

இந்த ஏழு தேவாரத் திருமுறைகளும் நம்பியாண்டார் நம்பியின் பணியால், நமக்குக் கிடைத்தன. இவை நாம் பெற்ற செல்வமாகும்.


**தேவாரம்**

| திருஞானசம்பந்த நாயனார் | திருநாவுக்கரசு நாயனார் | சுந்தரமூர்த்தி நாயனார் |
|---|---|---|
| முதலாம் திருமுறை | நான்காம் திருமுறை | ஏழாம் திருமுறை |
| இரண்டாம் திருமுறை | ஐந்தாம் திருமுறை | |
| மூன்றாம் திருமுறை | ஆறாம் திருமுறை | |

# 20. தொண்டு

திருநாவுக்கரசு சுவாமிகள் கையில் எப்பொழுதும் உழவாரம் வைத்திருப்பார். எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் அந்தக் கோயிலைச் சுற்றியுள்ள இடங்களைச் சுத்தம் செய்வார். உழவாரத்தாற் புல்லைச் செதுக்கித் துப்புரவாக்குவார்.

அப்பூதியடிகள் என்று அடியார் ஒருவர் இருந்தார். அவர் எல்லா இடங்களிலும் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்தார். களைத்து வருகின்றவர்களுக்கு அவை பெரிதும் உதவியாக இருந்தன. கிராமப் புறங்களில் இன்றும் யாத்திரிகர்களுக்காக நீர் வசதிகள் செய்திருப்பதைக் காணலாம். பறவைகளுக்குத் தண்ணீர் குடிப்பதற்காகக் கட்டப்பட்டுள்ள பறவைத் தொட்டிகளையும் நீங்கள் கண்டிருப்பீர்கள்.



திருநாவுக்கரசரும் உழவாரமும்

இவற்றின்மூலம் நாம் கற்றுக்கொள்ளும் படிப்பனை என்ன? எப்பொழுதும் நம்மால் இயன்ற அளவு பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்பதே. இதைத் தொண்டு அல்லது சேவை என்று குறிப்பிடுவோம்.

பிறருக்கு உதவிசெய்யுஞ் சிந்தனையை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். வாயாலும் எல்லோருக்கும் நன்மை தருகின்ற சொற்களையே சொல்லவேண்டும். உடம்பாற் பிறருக்கு உபகாரம் செய்யவேண்டும்.




தண்ணீர்ப் பந்தர்

# 21. ஆதிசேடன் சேவை

திருமாலுக்குத் தொண்டு செய்கின்ற பெரும் பேறு பெற்றவன் ஆதிசேடன். அவன் ஆயிரம் தலைகளுடைய பாம்பரசன்; மிகுந்த பலம் வாய்ந்தவன்; சிறந்த வீரன்.

அவன் ஒருமுறை வாயுதேவனுடன் போட்டியிட்டான். மேரு மலையின் சிகரத்தைப் பெயர்க்கக்கூடிய பலம் தனக்கோ வாயுதேவனுக்கோ உண்டு என்று பலப் பரீட்சை செய்தான்.

இவ்வளவு பலவானாக இருந்தும் திருமாலுக்குத் தொண்டனாக இருந்து பணிவிடை செய்வதில் ஆதிசேடன் பெரிய இன்பம் கண்டான்! கடவுளுக்கு ஒரு தொண்டன் எப்படியெல்லாம் தொண்டு செய்யவேண்டும் என்பதை நாம் ஆதிசேடன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

ஆதிசேடனுக்கு அனந்தாழ்வான் என்றும் ஒரு பெயர் உண்டு. திருமால் நித்திரை செய்ய இடமாக அமைந்தவன் என்பதனாலே திரு என்ற சிறப்புப் பெயரும் அவனுக்கு உண்டு. அனந்தல் என்பதற்கு நித்திரையென்று பொருள். திருமால் யோக நித்திரை செய்பவர். அவருடைய துயில் அறிதுயில் என்பார்கள். பார்ப்பதற்குத் தூங்குவதுபோல் இருந்தாலும் எல்லாவற்றையும் அறிந்து காத்தல் தொழில் செய்யும் அவர் தியானத்தில் படுத்திருப்பதையே அது குறிக்கும்.

அறிதுயில் செய்யும் திருமாலுக்குத் திருவனந்தாழ்வான் எங்ஙனம் எல்லாவிதமான ஊழியமும் செய்கின்றானோ, அதேபோல நாமும் கடவுளுக்குத் தொண்டு செய்யவேண்டும்.

ஆதிசேடன் எங்ஙனம் தொண்டு செய்கின்றான்? அவன் திருமால் உலாவும்போது அவருக்குக் குடையாக

நின்று சேவை செய்வான். அவர் எழுந்தருளியிருந்தால் தன்னைச் சுருட்டி அவர் அமரும் சிங்காசனமாக ஆக்கிக் கொள்வான். அவர் நடக்கும்பொழுது அவரது பாத அணியாகப் பணிசெய்வான். பாற்கடலில் அவர் பள்ளி கொள்ளும்போது அவன் அவரைத் தாங்கும் தெப்பமாக அமைவான். ஒளிதரும் இரத்தின தீபமாகவும், உடுக்கும் பட்டாடையாகவும், தழுவிக்கொள்ளும் மெத்தையாகவும் அவன் பெருமாளுக்குச் சேவை செய்கின்ருன்.

திருமால் இராமனுகவும், கிருஷ்ணனுகவும் பூவுலகில் அவதாரம் செய்தபொழுது ஆதிசேடன் தானும் சகோதர ஞகி வந்து சேவை செய்தான்.

தொண்டின் பெருமைக்கு ஆதிசேடன் ஒரு எடுத்துக் காட்டு.



பாம்பின்மேல் திருமாலின் சயனம்

சென்ருல் குடையாம் இருந்தால்சிங் காசனமாம்
நின்ருல் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு

# 22. தருமபுத்திரன் யாகம்

பஞ்சபாண்டவர்களில் முதல்வன் தருமபுத்திரன். இவன் இந்திரப் பிரஸ்தம் என்னும் நகரிலே ஒரு பெரிய யாகம் செய்தான். பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்திருந்தார்கள். வந்தவர்களுக்கு உணவும் தானமும் வழங்கப்பட்டது. யாகம் விமரிசையாக நடந்தது. ஏராளமான பேருக்கு அன்னதானம் செய்துவிட்டோம் என்று தருமபுத்திரன் பெருமைப்பட்டார். அப்பொழுது அந்த யாக மண்டபத்துக்கு ஒரு கீரி வந்து நிலத்தில் விழுந்து புரண்டது. அதனுடைய உடலின் ஒரு பக்கம் பொன்னிறமாக



யாக குண்டம்

இருந்தது. கீரியின் செயலைக் கண்ட பாண்டவர்கள், அது ஏன் அப்படிச் செய்கிறது என்று கேட்டனர். அப்பொழுது கீரி, "நான் ஒரு வீட்டிலே சிந்திக்கிடந்த மாவில் புரண்டேன். அந்த மா என்மேல் ஒட்டிக்கொண்ட பகுதி பொன்னிறமாகியது. அதன்பின்னர் இப்படி விசேடமான இடங்களில் வந்து புரண்டு பார்க்கிறேன். ஆனால் எனது உடலின் மறுபகுதி பொன்னிறமாகவில்லை. என் செய்வேன்" என்றது.

அப்பொழுது பாண்டவ குமாரர்களில் ஒருவரான சகாதேவன், "உன்மேல் ஒட்டிக்கொண்ட மாவில் அப்படி என்ன சிறப்பு" என்று கேட்டான். அதற்குக் கீரி, அந்த மா சிந்திக்கிடந்த வீட்டின் கதையைச் சொல்லத் தொடங்கியது.


# 23. மிகப் பெரிய தானம்

**கீரி சொன்ன கதை**

''அங்கொரு வீட்டிலே ஒரு அந்தணன் இருந்தான். அவன் மிகவும் ஏழை. அவனும், மகனும் வயலிலே சிந்திக்கிடக்கும் நெல்மணிகளைப் பொறுக்கிவந்து வீட்டிலே கொடுப்பார்கள். அதை அவனுடைய மனைவியும் மருமகளும் மாவாக அரைத்து அப்பம் செய்வார்கள். அந்த அப்பம்தான் அவர்களுக்கு நாள்முழுவதும் உணவு. மருமகள் எப்படியாவது தங்கள் நாலு பேருக்குமாக நான்கு அப்பங்களைச் செய்துவிடுவாள். அவற்றை ஆண்டவனுக்கு நிவேதித்துவிட்டு மாமனுக்கும் மாமிக்கும் முதலில் கொடுப்பாள். அதன்பின் தன் கணவனுக்குக் கொடுப்பாள். அவர்கள் மூவரும் சாப்பிட்டபின்னரே தான் உண்பாள்.

ஒருநாள் உணவு நேரத்திலே ஒரு கிழவர் வந்தார். அவர் பசியினால் வாடி இருந்தார். அவருடைய முகத்தைப் பார்த்த உடனேயே, அந்தணன் அவரை அன்போடு வரவேற்று உள்ளே அழைத்துச்சென்று உட்காரவைத்தான். தனக்கு வைத்திருந்த அப்பத்தை அவருக்கு எடுத்துக் கொடுத்து உண்ணும்படி வேண்டினான். வந்தவருக்கு ஒரே பசி. அவர் அதைச் சாப்பிட்டு விட்டு அந்தணனின் முகத்தைப் பார்த்தார். அந்தணனின் மனைவி அவருக்குப் பசி தீரவில்லை என்பதைத் தெரிந்துகொண்டாள். தன்னுடைய அப்பத்தையும் அவருக்குக் கொடுத்தாள்.

அதை உண்டும் அவருக்குப் பசி தீரவில்லை. மகனும் தன்னுடைய பங்கைக் கொடுத்தான். அப்பொழுதும் அவருக்குப் பசி தீரவில்லை. மருமகளும் தனக்காக வைத்



ஏழைப் பிராமணர் வயோதிபருக்கு
உணவு பரிமாறல்

திருந்த அப்பத்தை எடுத்துக் கொடுத்தாள். வந்த விருந்தினர் உண்டு பசிதீர்ந்து விடைபெற்றுச் சென்றார். அந்த நால்வரும் அன்று முழுவதும் பசியோடு பட்டினியால் வாடினார்கள். எனினும், பசியோடு வந்த விருந்தினரை உபசரிக்க முடிந்ததே என்று மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இங்ஙனம் கதை சொல்லிய கீரி தொடர்ந்து சொல் லிற்று. ''நான் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண் டிருந்தேன். அப்பம் செய்த மா, அவ்விடத்திலே சிந்திக் கிடந்தது. நான் அந்த மாவில் புரண்டேன். என்னுடைய உடலிற் பாதி பொன்னிறமாகியது. என்னுடைய உடலின் மறுபகுதியும் பொன்னிறமாகவேண்டு மென்று ஆசை ஏற் பட்டது. ஆகவே இந்த யாக மண்டபத்தில் வந்து புரண் டேன். அந்த ஏழை வீட்டாருடைய செயல் இந்த யாகத்திலும் பெரியது'' என்று சொல்லிப் போய்விட்டது.

அப்பொழுது தருமர், ''நாம் இவ்வளவு சிறப்பாகச் செய்த யாகத்தைவிட, அந்த ஏழை செய்த தானம் எவ்வளவு பெரியது என்று நமக்கு இப்பொழுதுதான் தெரிகிறது'' என்றார்.


# 24. ஆருணி

மிகப் பழைய காலத்திற் பள்ளிக்கூடங்கள் இல்லை. அவற்றுக்குப் பதிலாகக் குருகுலங்களே இருந்தன. அறிவிலும் தவத்திலும் ஒழுக்கத்திலும் குணத்திலும் சிறந்த பெரிய முனிவர்கள் அமைதியான இடங்களிலே ஆச்சிரமங்கள் அமைத்து வாழ்ந்தார்கள். நகரங்களுக்கு வெகு தூரத்தில் அமைந்திருக்கும் ஆற்றோரம், மலையடிவாரம் போன்ற இடங்களைத்தான் ஆச்சிரமம் அமைக்கத் தகுந்த இடமாகத் தேர்ந்துகொள்வது வழக்கம்.

இந்த முனிவர்களைக் குருவாகக் கொண்டு அவர்களிடத்திற் கல்வி பயிலுவதற்காகச் சிறுவர்கள் பலர் வந்து சேருவார்கள். கல்வி பயிலும் காலம் முழுவதும் அவர்களுடனேயே வசிப்பார்கள். கல்வி பயிலும் நேரம் போக எஞ்சிய நேரத்திற் குருவின் வீட்டு வேலைகளைச் செய்வார்கள். இந்த மாணவர்களிற் பெரிய அரச குமாரர்களும் உண்டு. சாதாரண பிள்ளைகளும் உண்டு. குரு எல்லோரையும் வேற்றுமையின்றி நடத்துவார். கல்விப் பயிற்சி முடிந்த பின்பு அவர்கள் தத்தம் இடங்களுக்குச் செல்வார்கள்.

இப்படிப்பட்ட ஒரு குருகுலத்திலேதான் ஆருணி என்ற சிறுவன் வசித்து வந்தான். அவனுடைய குருவாக விளங்கியவர் தௌமியர் என்ற முனிவர்.

ஒருநாள் தௌமிய முனிவர் பாடம் நடாத்திக்கொண்டிருந்தார். ஆருணியும் வேறு பல சீடர்களும் அங்கே இருந்தார்கள். அப்பொழுது வானம் கறுத்தது. இடி முழங்கியது. மழை பெய்தது. பாடம் கேட்டுக்கொண்டிருந்த சிறுவர்கள் ஒவ்வொரு பக்கமாக ஓடினார்கள். ஒருவன் வெயிலிற் காய்ந்துகொண்டிருந்த உடைகள்



குருகுலம்

மழையில் நனைந்துவிடுமே என்று அவற்றை எடுக்க ஓடினான். வேறு ஒரு சிறுவன் குடிசை ஒழுகுமே என்று அதைத் திருத்துவதற்காக ஓடினான். ஆனால் ஆருணி ஓடவில்லை. குருவினுடைய வயல் வரம்பிலே ஒரு சிறிய உடைப்பு இருந்ததை அவன் நினைத்தான். அது பெரிதாகிவிடுமென எண்ணினான். அதைத் திருத்தாவிட்டால் வெள்ளமேல்

லாம் ஓடி வயலை அழித்துவிடுமே என்று கவலைப்பட்டான். குருவிடம் உத்தரவு பெற்று வயல் வரம்பைத் திருத்த ஓடினான்.

அப்பொழுது பெருமழை பெய்தது. ஆருணி தயங்கவில்லை. குருவினுடைய வயலைப் பாதுகாக்கும் எண்ணமே அவனுக்கு இருந்தது. மண்ணை உருட்டி உருட்டி வரம்பிலே இருந்த உடைப்பை அடைக்கத் தொடங்கினான். வெள்ளம் மண்ணைக் கரைத்துக்கொண்டு ஓடியது. வெள்ளப் பெருக்கினால் வயல் அழியவிடாது தடுக்க நினைத்தான். சிறுவன் அந்த வரம்புக்குக் குறுக்கே படுத்துவிட்டான். உடைத்துக் கொண்டு வந்த வெள்ளம் தடைப்பட்டது. வயலும் பாதுகாக்கப்பட்டது.




வயலில் ஆருணி

சிறிது நேரத்தில் மழையும் ஓய்ந்தது. சிறுவர்களும் ஆச்சிரமத்திற்குத் திரும்பினர்கள். ஆருணியை மாத்திரம் காணவில்லை. ஆருணியை வயலுக்கு அனுப்பியதைக் குரு மறந்துவிட்டார். மற்றைய சீடர்களிடம் ''ஆருணி எங்கே'' என்று கேட்டார். அவர்கள் ''ஆருணி வயலுக்குச் சென்ருன்'' என்று சொன்ஞர்கள். அப்பொழுதுதான் அவருக்கு அவன் வயலில் வரம்பை அடைக்கச் சென்றது நினைவுக்கு வந்தது. உடனே அங்கே சென்ருர். சிறுவன் குளிரிலே விறைத்து, நடுங்கிக்கொண்டு இருந்தான். ஆனல் வயலைப் பாதுகாத்து விட்டான்.

குரு ஆருணியை எழுப்பினர். ஆருணி எழுந்து வந்தான். குருவைப் பணிந்தான்.

பிற்காலத்திலே இச்சிறுவனே ஆருணி உத்தாலகர் என்னும் மகா முனிவராகச் சிறந்து விளங்கினன்.



# 25. பசு

உலகத்திலே எத்தனையோ பிராணிகள் இருந்தாலும் பசுவையே நாம் தெய்வமாகத் தொழுகிறோம். பசுவைக் கோமாதா என்கின்றோம். தாய்க்கு அடுத்தபடியாகப் பசுவைத்தான் மாதா என்கிறோம். பசு புனிதமானது.

பசுவின் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் இந்த ஐந்தும் பஞ்ச கவ்வியம் எனப்படும்.

மண் தரை உள்ள வீடுகளைச் சாணத்தால் மெழுகலாம். முற்றத்திற்குச் சாணங் கரைத்த நீரைத் தெளிக்கலாம். தீய கிருமிகளை அழிக்கும் இயல்பு கோமயத்திற்கு உண்டு. பசுவின் சாணத்திலிருந்தே திருநீற்றைப் பெறுகின்றோம். தன்னலம் கருதாத பண்பையும் பசுவிடமிருந்து கற்றுக் கொள்ளலாம். அது மேய்வது புல். நமக்குக் கொடுப்பது பாலும் தயிரும் நெய்யும். மங்களம் நிறைந்தது பசு. எனவே பசுவைப் போற்றிக் காக்கவேண்டியது நமது பிரதான கடமை.

பசுக்கள் பெருகினல் நாட்டில் வளம் பெருகும். அன்பின் உருவமாகப் பசு விளங்குகின்றது. அதனுடைய பாலை அதன் கன்றுமட்டும் குடித்துப் பயன் அடைவதில்லை. எத்தனை குழந்தைகள் அந்தப் பசுவின் பாலால் உயிர் வாழ்கின்றனர்.

நாம் பசுவைத் தெய்வமாக வழிபடுகிறோம். பொங்கலுக்கு அடுத்தநாள் மாட்டுப் பொங்கல். அன்று வீட்டிலுள்ள பசுவை நீராட்டுவார்கள். பசுவுக்குப் பூமாலை சூட்டுவார்கள். குங்குமப்பொட்டு வைப்பார்கள். பொங்கல் படைத்து வழிபடுவார்கள். பசுவை இலட்சுமி, கோமாதா என்றும் சொல்வார்கள்.

திருச்சிற்றம்பலம்


வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே

திருச்சிற்றம்பலம்

— தேவாரம் —

வீடுகளிலே இட வசதியுள்ளவர்கள் பசு மாட்டை வளர்த்தல் வீட்டிற்குச் சிறப்பைத் தரும். நாம் பசுவுக்குச் செய்யும் உபசாரம் ஒவ்வொன்றையும் எம்மைப் படைத்த இறைவன் தமக்குச் செய்யும் வழிபாடாகவே ஏற்றுக் கொள்வார்.



பசுவும் கன்றும்

# 26. வைகறைத் துயிலெழு

சூரியன் உதிப்பதற்கு முன் உள்ள பொழுது வைகறைப் பொழுது எனப்படும். இந்த விடியற்கால வேளையிலே துயிலெழுவது சிறந்த பழக்கமாகும். பறவைகள் இந்த அதிகாலையில் எழுந்து குதூகலமாக ஓசையெழுப்பு வதைக் கேட்கலாம்.

வைகறைப் பொழுதில் உள்ளந் தெளிவாக இருக்கும். ஆழ்ந்த உறக்கத்துக்குப் பின்னர் மனம் சுறுசுறுப்புடன் எதையும் எளிதில் கிரகிக்கும் நிலையில் இருக்கும். ஆகவே இந்த நேரத்தில் எழுந்து படிப்பதும் நல்லவற்றைச் சிந் திப்பதும் நல்லது. இந்த நேரத்திற் படிப்பது நன்கு மனத்திற் பதியும்.

அதிகாலைப்பொழுது இறைவனை வணங்குவதற்கு ஏற்ற காலம். இந்த நேரத்தில் மனம் ஒருமைப்பட்டு இறைவனைப் பற்றி நினைப்பது எளிதாயிருக்கும். இந்த நேரத்தைப் பிரம்ம முகூர்த்தம் என்பார்கள். முனிவர்களும் யோகி களும் மிக அதிகாலையில் எழுந்து இறைவனைத் தியானிப்ப தால் அந்த நேரத்தில் எங்கும் தெய்வீக அலைகள் பரவி யிருக்கும் என்று கூறுவார்கள்,

அதிகாலையிற் கோயில்களில் உஷத் காலப் பூசை நடை பெறும். நடராசப் பெருமானது விசேட தினங்களில் இந்த நேரத்தில் அவருக்கு அபிஷேகம் நடைபெறும். மார்கழி மாதத்தில் அதிகாலையிலே திருவெம்பாவைப் பூசை இடம்பெறும்.

மார்கழி மாதத்திலே திருவெம்பாவை நாட்களில் அடியார்கள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து திருவெம் பாவைப் பாடல்களைப் பாடிக்கொண்டு வீதிகளைச் சுற்றி வருவார்கள். இந்த வழக்கத்தைச் சைவ மக்கள் வாழும் எல்லா இடங்களிலும் காணலாம்.



பஜனைக் குழு

விடியற் காலையில் அமைதி நிலவும். பகல் நேரத்தில் ஏற்படும் சத்தமும் சந்தடியும் ஆரவாரமும் இல்லை. அந் நேரத்தில் மனத்தை இறைவனிடம் பதித்து, வாயினால் இறைவனின் திருநாமங்களைக் கூறி நம்மைத் தூய்மைப் படுத்திக்கொள்ளுவது அவசியம். இறைவனுக்கு மலர் தூவித் தேவாரம் பாடி நம் அன்றாடக் கடமைகளைத் தொடங்குவது நல்லது.


அப்பர் பெருமான் நம்மை வைகறையிலே துயில் எழுங்கள் என்று வற்புறுத்துகின்றார். ''நீங்கள் நன்கு வாழ வேண்டுமானால் நான் சொல்வதுபோற் செய்யுங்கள். பொழுது புலர்வதற்கு முன் எழுந்து கோயிற் பணிகளைச் செய்யுங்கள். இறைவனுக்குத் தோத்திரம் பாடுங்கள்'' என்று ஒரு பாடலில் நமக்குக் கூறுகின்றார்.

திருச்சிற்றம்பலம்

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று
மாரூரா வென்றென்றே யலறு நில்லே

திருச்சிற்றம்பலம்

— அப்பர் திருத்தாண்டகம் —



அஞ்சலி செய்யும் கை

# 27. மூதுரை

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்

அட்டாலும் பால்சுவையிற் குன்ரு தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்

சாந்தனையும் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்

— ஔவையார் —

## கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைக் குழு

## 1978 — 1981

1. இளைப்பாறிய நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் (தலைவர்)
2. சுவாமி பிரேமாத்மானந்தஜி
3. கேணல் இரா. சபாநாயகம்
4. பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்
5. திரு. கி. லக்ஷ்மண ஐயர்
6. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
7. திரு. ப. சந்திரசேகரம்
8. கலாநிதி வே. இராமகிருஷ்ணன்
9. திரு. ந. சண்முகரத்தினம்
10. திரு. கு. பாலசிங்கம்
11. திரு. வே. முருகேசு
12. திரு. டி. எம். சுவாமிநாதன்
13. பேராசிரியர் த. நடராஜா
14. பேராசிரியர் ஆ. சதாசிவம்
15. திரு. சி. சிற்றம்பலம்
16. திரு. சி. உ. சோமசேகரம்
17. திருமதி பராசக்தி சுந்தரலிங்கம்
18. திரு. செ. வேலாயுதபிள்ளை
19. திருமதி பாலம் லக்ஷ்மணன்
20. திரு. பெ. கணநாதபிள்ளை. (செயலாளர்)

சைவநெறிப் பாடங்கள் எழுதுவதற்கு நூலகத்தைத் தந்து உதவிய இராமகிருஷ்ண மடம் சுவாமிகளுக்கு மனமார்ந்த நன்றி உரித்தாகிறது.

Jaffna 24 - 07 - 91

871936

22934

$\frac{a(1-r^4)}{(1-r)}$

$\frac{1(1-(1/2)^8)}{1-1/2}$

$1(1-\frac{1}{256})$

$\frac{255}{256}$ / $\frac{1}{2}$

$1-\frac{1}{256}$ = $\frac{255}{256}$

27-3-1991 871942 Banking Corp. 22934 Jaffna. Dinnama. 2337178

කිස්තු ධර්මය - 4 (ඇද)